# விருத்தாசலம் நகராட்சி

## மன்ற கூட்ட அழைப்பிதழ்

2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 02.12.2025 செவ்வாய் கிழமை அன்று பிற்பகல் 03.05 மணிக்கு அவசரக்கூட்டம் விருத்தாசலம் நகராட்சி அலுவலக நகர்மன்ற கூட்டத்தில் நடைபெறும், அதற்கான மன்றப்பொருள் இத்துடன் இணைத்து அனுப்பிவைக்கப்படுகிறது. அவ்வமயம் தாங்கள், தவறாமல் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்ற தலைவர்,
விருத்தாசலம் நகராட்சி.

**பொருள் எண்: 01**

தமிழ்நாடு அரசிதழ் அறிவிக்கை எண். 252, நாள். 02.06.2025 ல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் அடிப்படையில் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 37(1)(i.a) ல் மாற்று திறனாளர் மன்றம் உறுப்பினர் நியமனம் குறித்து திருத்தம் செய்யப்பட்டு அரசாணை நிலை எண். 119, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள். 26.06.2025 மற்றும் அரசாணை நிலை எண். 120 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள். 26.06.2025 ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேற்படி நியமனம் குறித்து வரப்பெற்ற விண்ணப்பங்களில் மாவட்ட ஆட்சியர், கடலூர் அவர்களின் கடித ந.க.எண். 3020/2025/அ2, நாள். 30.10.2025 ல் மாவட்ட அளவிலான குழு, திரு. தி. மணிகண்டன் த/பெ தியாகராஜன். 5/A3, திருவள்ளுவர் நகர் முதல் தெரு, பூதாமூர், விருத்தாச்சலம். அவர்களை விருத்தாசலம் நகர மன்றத்திற்கான மாற்று திறனாளர் நகர் மன்ற உறுப்பினராக நியமனம் செய்திட பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு நாள். 24.11.2025 ல் மேற்படி மாற்று திறனாளர் திரு.தி. மணிகண்டன் த/பெ தியாகராஜன் அவர்களை விருத்தாசலம் நகர மன்றத்திற்கான மாற்று திறனாளர் நகர மன்ற உறுப்பினராக நியமனம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளதை தொடர்ந்து 26.11.2025 அன்று திரு. தி. மணிகண்டன் த/பெ தியாகராஜன் அவர்கள் விருத்தாசலம் நகர மன்றத்திற்கு மாற்று திறனாளர் நகர மன்ற உறுப்பினராக பதவி ஏற்றுக்கொண்டார் என்ற விவரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் பதிவு செய்யலாம்.

<u>கோப்பு எண்.3227/2025/சி1</u>

**பொருள் எண்: 02**

மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களால் 14.08.2025 அன்று மாநகராட்சி/நகராட்சிகளில் பணிபுரியம் தூய்மை பணியாளர்களுக்கு காலை/மதியம்/இரவு வேலைகளில் ஏதேனும் ஒரு வேளை உணவு வழங்கும் வகையில் **"தூய்மை பணியாளர்களுக்கான உணவு வழங்கும் திட்டம்"** செயல்படுத்துவதாக அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், அரசாணை (4ப) எண்.56, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(நநி3) துறை, நாள்.21.11.2025ன்படி தூய்மை பணியாளர்களுக்கு காலை/மதியம்/இரவு வேலைகளில் ஏதேனும் ஒரு வேளை மட்டும் உணவு வழங்கவும் மற்றும்

அதற்கான செலவினங்களை சமந்தப்பட்ட நகராட்சியின் பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.29143/2025/எச்3, நாள்.22.11.2025ன்படி, மேற்கண்ட அரசாணையில் தெரிவித்துள்ள வழிக்காட்டுதல்களை பின்பற்றி நகராட்சி நிலைக்கு ஏற்றவாறும் மற்றும் உணவு வழங்கும் வேளைகளுக்கு ஏற்றவாறும் செலவினம் நிர்ணயம் செய்து தூய்மை பணியாளர்களுக்கு காலை/மதியம்/இரவு வேலைகளில் ஏதேனும் ஒரு வேளை மட்டும் உணவு வழங்கும் வகையில் "தூய்மை பணியாளர்களுக்கான உணவு வழங்கும் திட்டம்" செயல்படுத்த அனுமதித்து உத்திரவிடப்பட்டுள்ளது.

அதன்படி. விருத்தாசலம் நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் பணிபுரியும் நிரந்தர பணியாளர்கள் மற்றும் தனியார் ஒப்பந்த பணியாளர்கள் சேர்த்து ஆக மொத்தம் 312 பணியாளர்களுக்கு காலை உணவு மட்டும் வருடத்தின் 365 நாட்களுக்கும் வழங்க கீழ்கண்டவாறு செலவினம் கணக்கிடப்பட்டுள்ளது:-

**அட்டவனை – I**

**உணவிற்கான செலவினங்கள்**

| உணவு வழங்கும் நேரம் | ஒரு நபருக்கான ஒருவேளை/ஒரு நாள் உணவின் விலை | தேவைப்படும் எண்ணிக்கை | ஒரு நாளைக்கான செலவு தொகை ரூ. | ஒரு வருடத்திற்கான மொத்த செலவு தொகை ரூ. |
|---|---|---|---|---|
| காலை உணவு | ரூ.39/- | 312 | 12,168/- | 44,41,320/- |
| | | | கூட்டுக GST 5% | 2,22,066/- |
| | | | **மொத்தம் (அ)** | **46,63,386/-** |

**அட்டவனை – II**

**உணவு விநியோகத்திற்கான செலவினம்**

| வ.எண். | நகராட்சி நிலை | ஒரு மாதத்திற்கு ஆகும் செலவினம் ரூ. | ஒரு வருடத்திற்கு ஆகும் செலவினம் ரூ. |
|---|---|---|---|
| 1 | முதல் நிலை நகராட்சி | 23,870/- | 2,86,440/- |
| | | கூட்டுக GST 5% | 14,322/- |
| | | **மொத்தம் (ஆ)** | **3,00,762/-** |

**அட்டவனை – III**

**மொத்த செலவினம் (அட்டவனை I + II)**

| வ.எண். | உணவிற்கான செலவினம் GST உட்பட (அ) ரூ. | விநியோக செலவினம் GST உட்பட (ஆ) ரூ. | மொத்த செலவினம் ரூ. (அ+ஆ) |
|---|---|---|---|
| 1 | **46,63,386/-** | **3,00,762/-** | 49,64,148/- |
| | முதலாம் ஆண்டு செலவினம் | | 49,64,148/- |
| | இரண்டாம் ஆண்டு செலவினம் 5% ஏற்றத்துடன் | | 52,12,355/- |
| | மூன்றாம் ஆண்டு செலவினம் 5% ஏற்றத்துடன் | | 54,72,973/- |
| | | **மொத்த செலவினம்** | **1,56,49,477/-** |

மேற்கண்ட, செலவின பட்டியலின்படி, வெளிமுகமையின் மூலம் விருத்தாசலம் நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் பணிபுரியும் நிரந்தர பணியாளர்கள் மற்றும் தனியார் ஒப்பந்த பணியாளர்கள் சேர்த்து ஆக மொத்தம் 312 பணியாளர்களுக்கு காலை உணவு வருடத்தின் 365 நாட்களுக்கும் வழங்கும் பணிக்கு 26.11.2025 அன்று மின்னணு

ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன்படி, 26.11.2025 அன்று நடைபெற்ற மின்னணு ஒப்பந்தப்புள்ளியில் Online–இல் 2 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

வரப்பெற்ற 2 ஒப்பந்தப்புள்ளிகளை தொழில்நுட்ப தகுதி குறித்து கூர்ந்தாய்வு செய்ததில், 1. புவனேஸ்வரி , நெல்லிக்குப்பம் நிறுவனத்தின்(+3.59) குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளதால் தகுதி பெற்றும் மற்றும் 2. ஸ்ரீ சாய் ஆர்யபவன், திருக்கோவிலூர் நிறுவனத்தின்(+8.41)ஒப்பந்தப்புள்ளி அதிகமாக வழங்கியுள்ளதால் நிராகரிப்பு செய்யப்பட்டது. அதன்படி, தொழில்நுட்ப தகுதி பெற்ற கீழ்கண்ட ஒரு ஒப்பந்தப்புள்ளியின் Price Bid 27.11.2025–ல் திறக்கப்பட்டது ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு:–

| பணியின் பெயர் | அரசாணையின்படி உணவு தயார் செய்ய ஆகும் செலவினம் (மதிப்பீடு) | நிறுவனத்தின் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளியின் படி ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள விலை |
|---|---|---|---|
| வெளிமுகமையின் மூலம் விருத்தாசலம் நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் பணிபுரியும் நிரந்தர பணியாளர்கள் மற்றும் தனியார் ஒப்பந்த பணியாளர்கள் சேர்த்து ஆக மொத்தம் 312 பணியாளர்களுக்கு காலை உணவு வருடத்தின் 365 நாட்களுக்கும் வழங்கும் பணி | ரூ. 49,64,148/– | திருமதி. புவனேஸ்வரி, நெல்லிக்குப்பம் | ரூ. 51,41,682.00/– (மதிப்பீட்டை விட (+)3.59% அதிகம்) |

இந்நிலையில், திருமதி. புவனேஸ்வரி, நெல்லிக்குப்பம் நிறுவனம் மதிப்பீட்டை விட (+)3.59% அதிகம் கொடுத்துள்ளதால் விலையை குறைக்க Online–ல் கோரியதன்படி, கீழ்கண்டவாறு விலையை குறைத்து Online–ல் இறுதியாக வழங்கியுள்ளது. அதன்படி, இறுதியான ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு:–

| பணியின் பெயர் | அரசாணையின்படி உணவு தயார் செய்ய ஆகும் செலவினம் (மதிப்பீடு) | நிறுவனத்தின் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளியின் படி ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள விலை | குறைக்கப்பட்ட விலையின்படி ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள இறுதி விலை |
|---|---|---|---|---|
| வெளிமுகமையின் மூலம் விருத்தாசலம் நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் பணிபுரியும் நிரந்தர பணியாளர்கள் மற்றும் தனியார் ஒப்பந்த பணியாளர்கள் சேர்த்து ஆக மொத்தம் 312 பணியாளர்களுக்கு காலை உணவு வருடத்தின் 365 நாட்களுக்கும் வழங்கும் பணி | ரூ. 49,64,148/– | திருமதி. புவனேஸ்வரி, நெல்லிக்குப்பம் | ரூ. 51,41,682.00/– (மதிப்பீட்டை விட (+)3.59% அதிகம்) | ரூ. 49,62,321.00/– (மதிப்பீட்டை விட (–)0.02% குறைவு) |

எனவே, மேற்கண்டவாறு தகுதிப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பந்ததாரர் திருமதி. புவனேஸ்வரி, நெல்லிக்குப்பம் நிறுவனம் விலையை குறைத்து இறுதியாக மதிப்பீட்டை விட (–)0.02% குறைவாக கோரிய ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்தும் மற்றும் மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும், (–)0.02% குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த திருமதி. புவனேஸ்வரி, நெல்லிக்குப்பம் நிறுவனத்திற்கு பணிஉத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

.

அலுவலகக்குறிப்பு :–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

மேற்கண்ட பணியின் மதிப்பீட்டை விட (–)0.02% குறைவாக கோரிய திருமதி. புவனேஸ்வரி, நெல்லிக்குப்பம் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.5203/2025/எச்1**

## பொருள் எண்: 03

விருத்தாசலம் நகராட்சி ஆணையர் ஈப்பு வாகனம் எண். TN – 91–AX–4469 – 14.08.2025ல் பழுது நீக்கும் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட சங்காலாயா மோட்டார்ஸ், புதுச்சேரி நிறுவனதிற்கு அனுப்பப்பட்டது. இந்நிலையில் மேற்படி ஈப்பு வாகனம் கடந்த 18.08.2025 அன்று மின்னல் தாக்கி தீ விபத்து ஏற்பட்டதில் இந்நகராட்சி ஈப்பு வாகனம் உட்பட 11 வாகனங்கள் எரிந்து சேதமடைந்துவிட்டது எனவே சம்மந்தப்பட்ட நிறுவனமான சங்காலாயா மோட்டார்ஸ்ரிடம் இருந்து எரிந்த ஈப்பு வாகனத்தின் காப்பீட்டு தொகை ரூ 8.80 லட்சதிற்கு காசோலை எண். 969498, நாள். 31.10.2025 பெறப்பட்டு பொதுநிதி வரவு கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது ஆணையருக்கு புதிய ஈப்பு வாகனம் வாங்குவதற்கு காப்பீட்டு தொகைக்கு மேல் ஆகும் கூடுதல் செலவின தொகை ரூ.3.50 லட்சம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கபடுகிறது

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்:1765/2023/இ1

**பொருள் எண்: 04**

நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 33553/2022/EA2 SWM–15, நாள்.10.01.2023 ல் தெரிவித்துள்ளவாறு இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 01 முதல் 33 முடிய உள்ள அனைத்து வார்டுகளிலும் குப்பை கழிவுகளை சேகரம் செய்து வாகனங்கள் மற்றும் பணியாளர்களை கொண்டு குப்பைகளை தரம் பிரித்து அதனை இறுதியாக்கம் செய்யப்படும் இடத்தில் ஒப்படைத்தல் பணியினை மேற்கொள்ள 113 தூய்மை பணியாளர்கள் மூலம் Health Care Technology, திருவாண்மியூர், சென்னை 600 041. என்கின்ற நிறுவனம் மூலம் 11.05.2023 முதல் 10.05.2024 வரை ஓராண்டு காலம் பணி மேற்கொள்ள உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொண்டு வந்த நிலையில் ஓராண்டு காலம் 10.05.2024 ல் முடிவடைந்துவிட்டபடியால், தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் இருந்த காரணத்தினால், நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023 பிரிவு 57(7) ன் படி (11.05.2024 முதல் 10.08.2024) முடிய மூன்று மாதங்கள் மேற்கண்ட Health Care Technology , திருவான்மியூர், சென்னை. என்கின்ற நிறுவனமே தொடர்ந்து பணி மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டு பணி நீட்டிப்பு செய்து ஆணை வழங்கப்பட்டது. மேற்படி நிறுவனத்தின் பணிக்காலம் 10.08.2024 தேதியுடன் முடிந்த நிலையில், பணி அத்தியாவசியம் என்பதாலும், பொது சுகாதார பிரிவில் தூய்மை பணியாளர்கள் இல்லாத காரணத்தினால். அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று 11.08.2024 முதல் 10.05.2025 முடிய ஒன்பது மாதங்கள் மேற்கண்ட Health Care Technology , திருவான்மியூர், சென்னை என்கின்ற நிறுவனமே தொடர்ந்து பணி மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டது. மேற்கண்ட நீட்டிப்பு ஆணை வழங்கியதற்கு மன்றத்தில் பெறப்பட்டு ஓராண்டு காலம் பணி முடித்து தொடர்ந்து மேலும் ஓராண்டு காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்தால் ஒப்பந்த ஆவணத்தின் அடிப்படையில் இரண்டாம் வருட பணி நீட்டிப்பின்போது திடக்கழிவு சேகரிப்பிற்கான தொகையினை 10% (சதவீதம்) 11.05.2024 முதல் உயர்த்தி வழங்கியதை தொடர்ந்து 10.08.2025 வரை பணி நீட்டிப்பு பெற்று தற்போது வரை மேற்படி நிறவனமே பணி மேற்கொண்டு வருவதால் 11.05.2025 முதல் 10.05.2026 வரை மூன்று வருட பணி நீட்டிப்பின்போது திடக்கழிவு சேகரிப்பிற்கான தொகையினை 10% (சதவீதம்) 11.05.2025 முதல் உயர்த்தி டன்னிற்கு ரூ.4760 வீதம் வழங்க Health Care Technology , திருவான்மியூர், சென்னை நிறுவனம் எழுத்து மூலமாக கடிதம் வழங்கி கோரியுள்ளவாறு 10% (சதவீதம்) தொகை உயர்த்தி வழங்கவும், மொத்த உத்தேச செலவினம் ரூ. 468.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 4273/2022/எச்1).

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்வதை மன்றம் அங்கீகரித்து அனுமதிக்கலாம்.